www.padippakam.com

# ஜன்னலைத் திறவுங்கள்!



## அசோக்கிடம் சில கேள்விகள்...!

படிப்பகம்

www.padippakam.com



"எதிரிகள் எப்பொழுதும்
நேர்மையானவர்கள் அவர்களை
நாம் இனம் காண முடியும்.
எம்மோடு எம்மாய் இருந்து
குழிபறிக்கும் நயவஞ்சகர்கள்தான்
மிக மிக ஆபத்தானவர்கள்.
இவர்களைநாம் அடையாளம்
கொள்வது கடினம். இன்றைய
புகலிட சூழலில் இவர்களிடமிருந்து
எம்மை காப்பாற்றிக்கொள்ளல்
என்பது நாம் சந்திக்கும் பெரும்
சவாலாக உள்ளது"

~அசோக்~

படிப்பகம்

www.padippakam.com

# ஜன்னலை திறவுங்கள் !



- பாரிஸ் இலக்கிய முரண்பாடு
- தலித்தியம்
- பின் நவீனத்துவம்
- மார்க்சியம்
- பெண்ணியம்
- ஸீரோடிகிரி
- புகலிட இலக்கியம்
- சமர்

## அசோக்கிடம் சில கேள்விகள்

வெளியீடு:
இலக்கியநண்பர்கள்
பாரிஸ்

ஜன்னல் 01
டிசம்பர் 1999

படிப்பகம்

www.padippakam.com



***சுமார் இரண்டு வருட காலத்திலுள் புகலிடத்தில் குறிப்பாக பாரிஸ் சிறு சஞ்சிகை இலக்கிய நண்பர்கள் ஆர்வலர்களிடையே இருந்த நட்புகள், உறவுகள் பகை முரண்பாடாக்கப்பட்டு இலக்கிய நண்பர்களாகிய நீங்கள் பகை கொண்ட மனிதர்களாக ஆக்கப்பட்டமைக்கான காரணங்கள் என்னவென்று நினைக்கிறீர்கள்?***

உண்மையில் இது பற்றி நான் பல நண்பர்களுடன் பேசியுள்ளேன். இவ்வாறு நாங்கள் முரண்பாடு, பகை கொண்ட மனிதர்களாக ஆக்கப்பட்டமைக்கு அரசியல் பின்புலம் கொண்ட சதிகளே காரணம் என நான் நினைக்கிறேன். சாதாரணமாக எங்களினுள் நட்பு ரீதியில் பேசித் தீர்த்துக் கொள்வதன் மூலம் அணுக வேண்டிய விடயங்களை, கருத்து முரண்பாடுகளை, பிரச்சினைகளை மிக மோசமான பகை முரண்பாடாக்கி ஊதி பெருக்க வைக்கும் கயமைத்தனம் கொண்ட செயற்பாடுகளுக்கு பின்னால் ஒருசில நபர்கள் தீவிரமாக இயங்குவதிலிருந்து நான் இவ்வாறான முடிவுக்கு வரவேண்டியுள்ளது. நீங்களும் இவ்வாறான போக்கு ஒன்று செயற்படுவதை அவதானித்திருக்க முடியும். எங்கள் எல்லோரையும் பயன்படுத்தி தங்களின் அரசியல் எஜமானர்களுக்கு காட்டிக் கொடுக்கும் துரோகத்தனத்தையும், அடையாளப் படுத்தலையும் நயவஞ்சக மூளைத்தனம் பற்றியும் முரண்பட்டு இன்று வெவ்வேறு திசை கொண்டவர்களாக உள்ள நாங்கள் எல்லோரும் விழிப்பாக இருப்பது அவசியம் என்று கருதிறேன்.

***இவ்விலக்கியவாதிகளிடையே பிரச்சினைகள், முரண்பாடுகள் கடந்த காலங்களில் இருக்கவில்லையா?***

நாங்கள் எல்லோரும் கடந்த காலங்களில் பல்வேறு கருத்துக்களினால் பல்வேறு முரண்பாடு கொண்ட நண்பர்களாக பல்வேறு சந்தர்ப்பங்களில் இருந்துள்ளோம். எனினும் இந்த முரண்பாடுகளிலும் நாங்கள் இயல்பான ஆரோக்கியமான இலக்கிய உறவுகளையும், நட்புக்களையும் பேண முற்பட்டு வந்துள்ளோம். மாற்றுக் கருத்துக்களின் சுதந்திரமான ஜனநாயக மாற்றுத்தளமாக இலக்கிய சந்திப்புக்களும் சிறு சஞ்சிகைகளும் இருந்ததை நீங்கள் அறிவீர்கள். ஆனால் இந்த முரண்பாடுகளின் எல்லை திட்டமிட்ட அரசியல் சதித்தனங்களின் மூலம் நீட்டப்பட்டு சிறு சஞ்சிகைகளையும் கலந்துரையாடல்களையும் மற்றும் பல்வேறு மாற்று இலக்கிய



படிப்பகம்

www.padippakam.com



செயற்பாடுகளையும் சிதைக்கும் வண்ணம் நிறைவேற்றப்படுவதை இன்று உணரக் கூடியதாகவுள்ளது. இந்த சதி வலைக்காரார்கள் எங்களின் இலக்கிய உறவை மனித உரிமை மீறலுக்கு எதிரான எங்களின் ஒரு மித்த குரலை, அராஜகங்களை எதிர்க்கும் போக்கை மற்றும் ஆரோக்கியமான முற்போக்கு புகலிட இலக்கிய பரப்பினை உருவாக்கும் அனைத்து நிலைகளுக்கும் வேட்டு வைக்க வேண்டும் என்ற திட்டமிட்ட அரசியல் நயவஞ்சக நோக்கோடு செயற்படுகின்றார்கள் என்றே நான் கருதுகிறேன். இவர்களின் இந்த வஞ்சக வலைக்குள் எங்கள் புகலிட நண்பர்கள் சிலரும் அகப்பட்டு இவர்களின் நடவடிக்கைகளுக்கு கருவியாக பயன்பட்டுக் கொண்டிருப்பதையும் நான் சுட்டிக் காட்டவேண்டியுள்ளது.

***இந்த சதிகளுக்கும் செயற்பாடுகளுக்கும் பின்னால் உள்ள நபர்கள் யார் என்று கூறமுடியுமா?***

குறிப்பாக "அம்மா" என்ற சஞ்சிகையின் ஆசிரியராக இருக்கும் மனோ என்பவரும் சோபா சக்தி என்ற நபருமே இதன் இன்றைய பின்னணி யாளர்களாக கருதுகின்றேன். இந்த இரண்டு நபர்களின் கடந்த கால சதியும் இதன் தொடர்ச்சியுமே இன்றைய முரண்பாடுகளின் கூர்மை என நினைக்கிறேன். இதுவே இன்றைய முரண்பாடுகளின் உச்சம் என்பேன். இந்த நபர்கள் தொடர்பாய் கடந்த காலங்களில் எவ்வித விழிப்பும் அவதானமும் அற்று நாங்கள் இருந்து விட்டோம். இன்று துண்டுப்பிரசுரம் ஏனைய பிரச்சாரம் என்று இவர்கள் செய்யும் நடவடிக்கைகள் புதிய பரிமாணத்தைத் தொட்டுள் ளது. குறிப்பாக சமீபத்தில் பாரிஸில் நடந்த **"புது உலகம் எமை நோக்கி", "இந்துத்துவம் ஓர் பன்முக ஆய்வு", "ஸீரோ டிகிரி"**ஆகிய நூல்களின் பன்முக வாசிப்பு கலந்துரையாடலின் போது எனக்கும் சுகனுக்கும் ஏற்பட்ட முரண்பாட்டை மிகத் தீவிரமாக கூர்மைப்படுத்தி நான் சுகனை தாக்கியதாகவும் கூட்டத்தை குழப்பி இடை நிறுத்தி விட்டதாகவும் புகலிடத்தில் வளரத் துடிக்கும் இந்த அதிகார வன்முறைப் போக்கை அதன் முளையிலேயே களைந்தெறிய வேண்டும் என "அம்மா" ஆசிரியர் மனோவும், சோபா சக்தியும் செய்யும் பிரச்சாரத்தை பார்த்தாலே இதன் பின்னாலான அரசியலை நாங்கள் சுலபமாக புரிந்து கொள்ள முடியும். உதாரணமாக சோபா சக்தியும் அவர் கூட்டாளியுமான எம்.ஆர்.ஸ்டாலின் என்ற நபரும் சேர்ந்து வெளியிட்ட **"அசோகிற்கு ஒரு முத்தம்"** எனும் துண்டுப் பிரசுரத்தை படிப்பதன் மூலம் இவர்களின் அயோக்கியத் தனத்தையும்



படிப்பகம்

www.padippakam.com



வதந்தி பரப்பும் கயமைத் தனத்தையும் நீங்கள் புரிந்து கொள்ள முடியும். "துடைப்பான் என இலக்கிய வட்டாரத்தில் அறியப்பட்ட அசோக் எனும் நபர் தன் இருக்கையில் இருந்து எழுந்து ஓடி பின் தாவித் தாவி சுகனைத் தாக்கினார்".

சுகனுக்கும் எனக்கும் ஏற்பட்ட வாய்த் தர்க்கத்தை, முரண்பாட்டை எப்படியெல்லாம் புனைகின்றார்கள் பாருங்கள். இந்தத் துண்டுப் பிரசுரம் இங்கு விநியோகிக்கப்படாமல் இரகசியமாக இலங்கை, இந்தியா, ஏனைய ஐரோப்பிய நாடுகளுக்கு தபால் மூலம் விநியோகிக்கப்பட்டு பிரச்சாரப்படுத் தப்பட்ட செய்தியை நீங்களும் அறிவீர்கள். என்னையும், சம்பவத்தின் உண்மையை அறியாதவர்களையும் இவர்கள் ஏமாற்ற முடியும். என்னைப் பற்றிய தப்பபிப்பிராயத்தைக் கொடுக்க முடியும். இங்கு இந்த பிரசுரம் பற்றித் தெரிந்த போது எப்படி இவர்கள் சிறுமைப் பட்டு அம்பலமானார்கள் என்பதையும் நீங்கள் அறிவீர்கள்.

*இதன் பின்னணிக் காரணம் என்னவாக இருக்கும் என கருகின்றீர்கள்?*

புகலிடத்தில் இதுவரை காலமும் நாங்கள் சந்தித்த, எதிர் கொண்ட நெருக்கடிகளும் ஜனநாயக மறுப்பும் அராஜக செயல்தனங்களும் ஏராளம். இலக்கியவாதியும், வெளியீட்டாளரும், மனித உரிமைவாதியுமான சபாலிங்கம் அவர்களின் படுகொலை, மாற்றுச் சிறு சஞ்சிகைகளுக்கு எதிரான தடை, தொழிலாளர் பாதை மற்றும் மாற்று அமைப்புக்களின் மீதான தாக்குதல், மாற்றுக் கருத்துக் கொண்ட தனிநபர்கள் மீதான தாக்குதல், அச்சுறுத்தல் இவ்வாறு பலதைச் சொல்லமுடியும். இவற்றையெல்லாம் வன்மையாக கண்டித்தவர்களில் நானும், சுகனும், லட்சுமி, கலைச்செல்வன் மற்றும் சிறு பத்திரிகைச் சூழலைச் சேர்ந்த நண்பர்களும் அடக்கம். இப்போது நாங்களே முரண்படும் போது இச் சாதாரண முரண்பாட்டை கூர்மைப்படுத்தி இவர்களும் புகலிடத்தில் அராஜகவாதிகள், வன் செயலாளர்கள் என்று பிரச்சாரப்படுத் துவதனூடாக எங்களின் குரல்களை ஒலிக்காமல் தடுப்பதே இவர்களின் நோக்கமாகும். இதுவரை காலமும் புகலிடத்தில் குறிப்பாக பாரிஸில் நடந்த பல்வேறு மனித உரிமை மீறல்கள் அதிகாரத்துவ வன்முறைகளுக்கு எதிராக, கொலைகள் தொடர்பாக மௌனமாக நியாயப்படுத்திக் கொண்டிருந்த "அம்மா" ஆசிரியர் மனோவும், சோபாசக்தியும், எம். ஆர். ஸ்டாலின் என்ற நபரும் இந்த சாதாரண விடயத்தை பூதாகரமாக்கி



படிப்பகம்

எல்லா இடங்களிலும் பிரச்சாரப்படுத் துவதற்கு எடுக்கும் தீவிரத்தை பார்க்கும் போது இவர்களின் பின்னணி மனோபாவத்தை புரிந்து கொள்ள முடியும். அதுவும் அம்மா ஆசிரியர் மனோ எழுதுகின்றார். *"புகலிடத்தில் அரும்பும் முதலாவது அதிகாரத்துவ வன்செயலாகும் அசோக்கின் இந்த நடவடிக்கை".* எப்படி இருக்கின்றது பாருங்கள் இவரின் கதை!

அத்தோடு பன்முக வாசிப்பும் - கலந்துரையாடலும் தொடர்ந்து நடந்ததை திட்டமிட்டே மறைத்து விட்டார்கள் இவர்கள். இந் நிகழ்வில் கடைசிவரை "அம்மா" ஆசிரியர் மனோவும், சோபா சக்தியும், நான் அடித்ததாகக் கூறப்படும் சுகனும் இறுதிவரை கலந்து கொண்டு புத்தக விமர்சன உரையாடலிலும் பங்கு கொண்டார்கள். சுகனும் நானும் "ஸ்ரேோ டிகிரி" பற்றி பேசினோம். றயாகரன், தில்லை நடேசன் இவர்கள் "இந்துத்துவம் பன்முக ஆய்வு" நூல் பற்றி பேசினார்கள். "அம்மா" ஆசிரியர் மனோவும், சோபா சக்தியும் "புதுஉலகம் எமைநோக்கி" என்ற சிறுகதைத் தொகுப்பு பற்றி பேசினார்கள். இப் பன்முகவாசிப்பு - கலந்துரையாடலில் புஸ்பராஜா, அந்தோனிப்பிள்ளை, நாதன், மணிவண்ணன், விஜி, கலைச்செல்வன், லக்ஷ்மி, வனஜா, குணரெத்தினம், கிளி, விஜயன், பிரசாந்தி முதலானோர் கலந்து கொண்டனர். எனக்கும் சுகனுக்கும் ஏற்பட்ட இப் பிரச்சினையின் போது மிகவும் நியாயவாதியாகவும் நேர்மையாகவும் நடந்து கொண்டு தொடர்ந்து நிகழ்ச்சிகளை நடாத்துவதற்கு துணை நின்றவர் லக்ஷ்மி தான். அந்தப் பன்முக வாசிப்பில் கலந்து கொண்ட அனைவரும் உணர்வார்கள். ஆனால் இவர்கள் **"அசோக்கின் ரவுடித்தனத்திற்கு வக்காளத்து வாங்கிய லக்ஷ்மி"** என்று மிகவும் அப்பட்டமான, கயமைத்தனமான பொய்களை எழுகின்றார்கள். அதே நேரம் இப்பிரச்சினையின் போது பெண்களைக் கொச்சைப் படுத்தும் பாலியல் நிந்தனை சொற்களால் என் மீது வசை மாரி பொழிந்த கற்சுறா எனும் கணேஸ் என்ற நபரின் அடாவடித்தனங்களையும் மற்றும் ஸ்டாலின் என்ற நபரின் மோசமான வார்த்தைப் பிரயோகங்களையும், செயல்களையும் மூடிமறைத்து அனைத்து பிரச்சினைகளுக்கும் அசோக் என்ற நான் தான் மூல காரணமென என் மீது குற்றப்பத்திரிகை தாக்கல் செய்கின்றார்கள். இந்த நபர்களின் திட்டமிட்ட சதிக்கும், அபிலாசைகளுக்கும், கயமைத்தனங்களுக்கும் பலியாகிப் போனது பற்றி சுகன் குறைந்த பட்சமாவது நேர்மையின் உண்மையின் பால் நின்று உணரவேண்டும் என விரும்புகிறேன். சுகன் எப்போதும் சுயம் அற்ற நபராக எனக்குத் தெரிந்த காலம் முதல் இயங்குகின்றார். அவர் காலத்திற்கு காலம் பிழையான கருத்தியல், செயற்பாடுகள் கொண்ட நபர்களின் பயன்பாட்டுப் பொருளாக

மாறும் தன்மையை நிராகரித்து சுயம் கொண்ட மனிதனாக மாறவேண்டும் என விரும்புகிறேன். அவரிடம் பிரமிக்கத்தக்க எழுத்தாற்றல் உண்டு. ஆனால், அவரின் சிந்தனைகளும், செயற்பாடுகளும் அங்ஙனம் இல்லாமல் போய் விடுவது தான் பரிதாப கரமாக இருக்கிறது.

***ஒரு சில இலக்கிய வாதிகளுடன் ஏன் நீங்கள் அடிக்கடி முரண்ப டுகின்றீர்கள்?***

சந்தர்ப்பம் கிடைக்கும் போது இது பற்றி விரிவான கட்டுரை ஒன்று எழுத எண்ணியுள்ளேன். எனினும் சில விடயங்களை இங்கு சொல்வது அவசியம் என நினைக்கிறேன். ஓர் அரசியல் கோட்பாட்டை வரித்துக் கொண்டவன்/வரித்துக் கொண்டவள், தன்னை ஓர் முற்போக்காக காட்டிக் கொள்பவன் / காட்டிக் கொள்பவள், காட்டிக் கொள்ள முயல்பவன்/காட்டிக் கொள்ள முயல்பவள் குறைந்த பட்சமாவது சொந்த வாழ்வில் நேர்மை, உண்மை, மனிதநேயம் கொண்டவர்களாக இருக்க வேண்டும் என விரும்பு கிறேன். இந்த முதலாளித்துவ சமூக அமைப்பில் சிலவேளைகளில் நாங்கள் சமரசம் செய்ய வேண்டிய நிர்ப்பந்தம் உள்ளது என்பதை ஏற்றுக் கொண்டா லும் தனி நபர் சார்ந்த வாழ்வியக்கத்தில் போலியும், நடிப்பும், ஏமாற்றும் கொண்ட மனிதர்களாக, தாங்கள் பேசும் தத்துவார்த்த சிந்தனைகளுக்கு எதிர் மறைகொண்டவர்களாக நடந்து கொள்வதை நேரில் காணும் போது நான் கோபம் கொள்ள வேண்டி ஏற்படுகிறது. கடந்த காலங்களில் இவ்வாறான விடயங்களில் பலபேர்களுடன் நான் முரண்பட்டுள்ளேன். இதன் எதிரொலிதான் அந்த ஒரு சில நண்பர்களும் இந்த மனோ, சோபா சக்தி போன்றவர்களின் இந்த பிரச்சாரத்திற்கு துணைபோகும் அவல நிலை.

குறிப்பாக எம்.ஆர்.ஸ்ராலின் எனும் புனைபெயரில் எழுதும் ஞானம் என்ற நபரை எடுத்துக் கொள்வோம். இவரை எனக்கு மிக நீண்ட காலமாகத் தெரியும். சாதாரண ஆசிரியர் தொழில் கிடைக்க வேண்டும் என்பதற்காக இவர் செய்த துரோகத்தனம்... இதன் விளைவாக தனது கிராமத்தில் இரண்டு அப்பாவி இளைஞர்களின் உயிர்கள் புலிகளினால் பறிக்கப்பட்ட கொடுமை... அந்த இளைஞர்களின் குடும்பங்கள் இன்று வறுமையிலும், துயரங்களிலும் வாழ்கின்றது. இவரின் வாரலாறே துரோகத்தின் வரலாறாகும். இங்கு புகலிடத்திலும் அது தொடர்கின்றது. தொழிலாளர்களை முதலாளிக ளிடம் காட்டிக் கொடுத்து தங்களின் சுய இலாபத்திற்காக இவர்கள் செய்யும் துரோகங்கள் தலித்தியம் பேசிக் கொண்டு திருச்சியின் பின்தங்கிய

www.padippakam.com



ஒடுக்கப் பட்ட வறிய மக்கள் வாழும் கிராமங்களில் "கந்து வட்டிக்கு" பணம் கொடுப்பது, இலக்கிய விஜயம் என்ற பெயரில் தங்களின் முதலீடுகளை, வியாபாரங்களைப் பெருக்குவதற்கு தமிழக விஜயம்/தங்களின் வியாபாரத் தனங்களை மூடிமறைக்கவும், ஓர் தகுதிக்காகவும், தங்களை அடையாளப்ப டுத்துவதற்காகவும் புகலிடத்தில் ஒரு சஞ்சிகையை வெளியிடுவது, இவர்கள் கொடுக்கும் பணத்திற்காக எவ்வாறாயினும் "மாரடிக்க" தமிழகத்தில் தயாராக இருக்கும் வளர்மதி போன்ற "எழுத்து விபச்சாரன்களை"க் கொண்டு புகழாரம் சூட்டிக் கெள்வது... இந்த போலித்தனங்களை எப்படி சகித்துக் கொள்ள முடியும்?

***அன்றைய கூட்டத்தில் சோபா சக்தியுடனும் நீங்கள் முரண்பட்டதாக சொல்லப்படுகின்றதே?***

ஆமாம். எனக்கும் சுகனுக்கும் ஏற்பட்ட முரண்பாட்டின் போது இவர் என்னிடம் "நீர் கடந்த காலங்களில் **PLOTE** இல் இருந்து செய்த அராஜகம் எங்களுக்குத் தெரியும்" என்று கூறினார். எனக்கு ஒரே ஆச்சரியம். சோபா சக்தி என் கடந்த கால அரசியல் பற்றி பேசுகின்றார். இவருக்கு இதைப் பற்றிப் பேச குறைந்த பட்சமாவது உரிமை, நேர்மை உண்டா என்பது பற்றி இப்பொழுதும் நான் யோசிக்கிறேன். ஒரு மனிதன் இன்னொரு மனிதனின் கடந்தகால அரசியலைப் பற்றி பேசமுற்படும் போது தான் கடந்து வந்த பாதையை ஒரு கணமேனும் சுயவிமர்சன அடிப்படையில் சிந்திக்க வேண்டும் என நான் விரும்புகின்றேன்.

நான் கடந்த காலங்களில் புளொட்டில் இருந்ததை நீங்கள் அறிவீர்கள். புளொட்டில் ஏற்பட்ட ஜனநாயக மறுப்பு அராஜக நடவடிக்கைகளினால் இயக்கத்தின் செயற்பாடுகள் அனைத்திலும் இருந்து 1985 இன் இறுதிப் பகுதியில் வெளியேறியவன் நான். இந்த இயக்கத்தினுள் ஜனநாயகத்தை வேண்டி அராஜகத்திற்கு எதிரான செயற்பாடுகளில் இயங்குதலில் என் பங்கு கணிசமானது. இந்நடவடிக்கைகளினால் நான் சுடப்பட்டு உயிர் தப்பிய சம்பவத்தை என்னோடு இயக்கத்தில் இருந்தவர்கள் அறிவார்கள். என் இயக்க வரலாறு என்பது அராஜகத்திற்கு எதிரான, மனித நேயத்தை வேண்டிய வரலாறாகவே இருந்தது. இன்றும் உள்ளது. ஆனால் சோபா சக்தியின் வரலாறு இன்றைய நடவடிக்கைகள்...?

உண்மையில் இந்நபரின் புகலிட இலக்கிய பிரவேசம் எனக்கு, எங்களுக்கு நெருங்கி வரும் அபாயத்தை முன் கூட்டியே எச்சரிக்கின்றது.



படிப்பகம்

யாழ்ப்பாணத்தில் தீவுப் பகுதியில் தமிழீழ விடுதலைப்புலிகளின் பொறுப்பாளராக இருந்த இவர், செய்த அராஜகங்கள் சித்திரவதைகள் தொடர்பாக நானும் மற்றவர்களும் ஒன்றும் அறியாத நிலையில் உள்ளோம் என நினைக்கின்றார். புலிகளினால் மாற்றியக்கப் போராளிகள் படுகொலை செய்யப்பட்ட போது இவற்றைத் தீவுப் பகுதியில் முன்நின்று செயற்படுத்தியவர்களில் இவரும் ஒருவர். ராஜினி திரணகம யாழ்ப்பாணத்தில் வைத்து தமிழீழ விடுதலைப்புலிகளால் கொலை செய்யப்பட்டபோது அக்காலப்பகுதியில் புலிகளின் வீரச் செயலை புகழ்ந்துரைக்கும் அன்றைய "சுவரொட்டிக் கவிஞராக" இவர் அங்கு திகழ்ந்ததை பலரும் அறிவார்கள். இவரின் கொலை வெறித் தனத்தில் இருந்து தப்பியவர்கள் பலர் இன்னும் இங்கு உயிரோடு உள்ளார்கள். அவர்களின் சாட்சியங்கள் இவரின் கொடுமைகளுக்கு இன்னும் அத்தாட்சியாக திகழ்கின்றன. மண் விற்பனை மற்றும் பணமோசடி தொடர்பாக இயக்கத்தை விட்டு வெளியேற்றப்பட்டு, பின் இவரின் "விசுவாச சேவைக்காக" இயக்கத்தில் மீண்டும் சேர்த்துக் கொள்ளப்பட்டவர் இவர். அதன் பின் பாங்கொக்கில் ஏஜென்சியாக வெளிநாடுகளுக்கு ஆள் கடத்தும் நபராக கொஞ்சக் காலம் இருந்து செய்த தில்லுமுல்லுகள், சேட்டைகள் யாவும் நாங்கள் அறிவோம். பின் பாரிஸ் வந்து சேர்ந்த பின்பும் புலிகளின் புகழ் பாடும் கடமையைக் கண்ணாரக் காப்பாற்றிய பெருந்தகை இவர். ஆண்ட பரம்பரையின் புகழ்பாடி தமிழர் கல்வி நிலையம் ஒன்றின் பரிசில் பெற்ற உன்னத "இலக்கிய" வரலாறும் இவருக்கு உண்டு. இவரின் உளவியல் இன்றும் தமிழீழ விடுதலைப்புலிகளின் கொலைக்சலாச்சாரத்தோடு பின்னிப் பிணைந்திருப்பதை இவரின் சில வார்த்தைப் பிரயோகங்களிலிருந்து நீங்கள் புரிந்து கொள்ள முடியும். அத்தோடு இவருடைய எழுத்துக்களைப் படிப்பவர்கள் இவரின் குள்ள நரித்தனங்களையும் புரிந்து கொள்ள முடியும். சிறு கதை என்ற போர்வையில் ஈழத்தில் தமிழீழ விடுதலைப்புலிகளினால் மேற் கொள்ளப்பட்ட சில மனித உரிமை மீறல்களை மறைத்து ஏனைய விடுதலை அமைப்புக்களின் தலையில் சுமத்தும் கயமைத்தனம், புலம்பெயர் சூழலில் இன்று தாக்கத்தைக் கொடுக்கும் சில படைப்பாளிகள், மனித உரிமைவாதிகள், தமிழீழ விடுதலைப்புலிகளின் மனித உரிமை மீறல்களை எதிர்க்கும் இலக்கிய ஆர்வலர்கள் போன்றோரைப் பற்றி கவுண்டமணி செந்தில் பாணியில் இவர் கக்கும் நக்கல்கள், இவற்றைப் பிரசுரிக்க மனோ என்ற நபரின் அம்மா சஞ்சிகை. ஆனால் தமிழீழ விடுதலைப்புலிகள் தொடர்பாக ஒரு சிறு குற்றச்சாட்டு விமர்சனம் வந்தாலே அப்பிரதி அம்மா சஞ்சிகையில் பிரசுரிக்க தகுதியற்றதாகிவிடும். எனக்கும் பல படைப்பிலக்கிய நண்பர்களுக்

கும் பலதடவை இவ்வாறு நடந்துள்ளது. அதேநேரம் மற்றவர்களை கொச்சைத் தனமாக விமர்சிக்க தாராளமாக இடம் கொடுக்கும் அம்மா ஆசிரியர் மனோ தன் எழுத்துக்கள் தொடர்பான ஆக்கபூர்வமான விமர்சனங்களை கூட ஏற்றுக் கொள்ளமுடியாத மனநோய் கொண்டவர். சிறிது காலத்திற்கு முன் இவர் தயாரித்த நாடகம் ஒன்றிற்கு நான் சரிநிகரில் எழுதிய விமர்சனத்திற்கு இவர் தொலைபேசியில் எனக்கு பேசிய மலினத்தனமான வசைபாடல்கள்... மிரட்டல்கள்... இதுதான் இவர்களின் இலக்கிய முகம். இவ்விடத்தில் அம்மா ஆசிரியர் மனோ தொடர்பாக இன்னோர் விடயத்தையும் குறிப்பிடுவது அவசியம் என கருதுகின்றேன். 14வது இலக்கியச் சந்திப்பு பாரீசில் நடைபெற்ற போது அன்றைய நேரத்தில் தமிழீழ விடுதலைப்புலிகளின் சர்வதேசப்பொறுப் பாளராக இருந்த லோரன்ஸ் திலகரை இவ் இலக்கியச்சந்திப்புக்கு பிரதம அதிதியாக அழைக்கவேண்டும் என்பதில் இவர் காட்டிய தீவிரமும், இலக்கியச்சந்திப்பு சுதந்திரமான ஜனநாயக மாற்றூடகம் என்பதால் இவரின் இயக்க சார்பு நிலைகொண்ட கோரிக்கை எல்லோராலும் நிராகரிக்கப்பட்டவுடன் இலக்கியச் சந்திப்பு, கருத்தரங்குகளில் இருந்து ஒதுங்கியிருந்த இவர் மீண்டும் இலக்கிய அரங்கினுள் பிரவேசம் கொண்டது, அதுவும் தன் அரசியல் கூட்டாளி சோபாசக்தியோடு இணைந்து இயங்குதல் என்பது கவலையையும் பயத்தையுமே கொடுக்கின்றது.

*இக்கலந்துரையாடலில் "ஸீரோ டிகிரி" பற்றி கடும் விமர்சனத்தை நீங்கள் வைத்ததாக கூறப்படுகின்றது. ஆனால் நமது புகலிட பின் நவீனத்துவ வாதிகளாக தங்களைக் காட்டிக்கொள்பவர்கள் "ஸ்ரோ டிகிரி"யை நாவலின் உச்சம் என்கிறார்கள். "இந்தியா டுடே"யும் இந்த இருபதாம் நூற்றாண்டின் சிறந்த நாவல்களில் ஒன்றாக, பின் நவீனத்துவ எழுத்து முறை என்கிறதே?*

நாவலின் உச்சம் என்று சொல்லுகின்ற அளவிற்கு அதில் என்ன உள்ளது என்பது பற்றி இந்த பின் நவீனத்துவவாதிகளாய் தங்களைக் காட்டிக் கொள்ளும் இந்த நபர்களிடமே இக்கேள்வியை நீங்கள் கேட்க வேண்டும். இவர்கள் தானே இங்கு அதன் பிரச்சாரர்களாக, விற்பனையா ளர்களாக இருக்கின்றார்கள்.

"ஸீரோ டிகிரி"யைப் பொறுத்தவரையில் பாலியல் குறித்த பெண்ணின் பார்வையை கொச்சைப்படுத்தும் மிக மோசமான ஆணாதிக்க நிலைகொண்ட

www.padippakam.com



ஓர் போனொகிறாபி மனநோயாளியின் எழுத்துக்கள் என்றே இதற்கு என்னால் சுருக்கமான விமர்சனத்தை வைக்கமுடியும்.

ரமேஸ்பிரேதன் கூறுவது போல் "குப்பைகளின் தொகுப்பைபோல் இருந்து கலகம் செய்வதாகத் தோன்றும் இந்நூல் உண்மையில் இந்துத்துவ அமைப்பை உருவாக்கும் ஒரு அரசியல் புரோகிராம் ஆகும். தமிழில் இந்தியத்தன்மை, இந்துத்துவ தன்மை இவற்றிலிருந்து மீறாத எந்த எழுத்தும் உன்னத இலக்கியமாகிவிடும்" இந்த வகையில்தான் இந்தியா ருடே ஜெயமோகனின் "விஸ்ணுபுரத்தை"யும், "ஸீரோ டிகிரி"யையும் பார்க்கின்றது. அத்தோடு இந்தியா ருடே இதை பின் நவீனத்துவ நாவல் என்பதற்கு ஓர் உந்துதலும் உண்டு. பின் நவீனத்துவம் செயற்பாடு அற்ற நிலையை உருவாக்கும் தன்மையைக் கொண்டது. இதை சமஷ்கிருதத்தில் "நிஷ்கிரியா" என்பதாக பின் நவீனத்துவ விமர்சகர் வேணுகோபாலன் குறிப்பிடுகிறார். சிலவேளை பின் நவீனத்துவத்திற்கும், இந்துத்துவத்திற்கும் நெருங்கிய உறவு இந்நிலையில் உள்ளதோ தெரியவில்லை. இதனால் தான் இந்தியா ருடே "விஸ்ணுபுரத்தை"யும், "ஸீரோ டிகிரி"யையும் தெரிவு செய்ததோ எனக்கூட ஐயப்பட வேண்டியுள்ளது.

***நீங்கள் தலித்தியத்திற்கு எதிரானவர் என்று சோபாசக்தி, ஸ்ராலின் குழுவினால் அச்சிடப்பட்ட துண்டுப்பிரசுரத்தில் கூறப்படுகின்றதே?***

சாதித்துவத்தால் ஒடுக்கப்பட்ட மக்களின் விடுதலையின் பால் அக்கறையும், நேசிப்பும் கொண்ட எவருமே தலித்திய சிந்தனைகளுக்கு எதிரானவர்களாக இருக்க முடியாது. ஆனால் பின் நவீனத்துவ வாதிகளாக தம்மை இங்கு காட்டிக் கொள்ளும் இந்த சந்தர்ப்பவாதிகள் பேசும் தலித்திய போக்குக்கு நான் எதிரானவனே. தலித்தியம் என்பதை சாதியத்தால் ஒடுக்கப்பட்ட மக்களின் போராட்ட வடிவமாக அதன் கோட்பாடாக பார்க்கிறேன். அம்மக்களை உணர்வு பூர்வமாக நேசிப்பவன்/நேசிப்பவள், அம்மக்களின் ஒருவனாக/ஒருத்தியாக மாறும் சகமனிதர்களினால் மாத்திரமே அவர்களின் அரசியல் சமூக, பொருளாதார, கலாச்சார, பண்பாட்டு நெருக்கடிகளை புரிந்து கொள்ளமுடியும். தங்களின் இருப்பு நிலையை தக்க வைத்துக் கொள்ள "பிராமணிய தலித்தியம்" பேசும் இந்த சந்தர்ப்பவாதிகளால் அந்த மக்களின் வாழ்வியலை, அதன் துயரங்களை புரிந்து கொள்ளமுடியாது. தலித்திய சிந்தனையாளரும் செயற்பாட்டாளருமான கே.ஏ. குணசேகரம் அவர்கள் இங்கு வந்தபோது நடந்த கருத்தரங்கில்



படிப்பகம்

www.padippakam.com



இந்த தலித்திய போலிகளின் முகத்திரை கிழிந்ததை நீங்கள் பார்த்தீர்கள். தலித்தியம் பேசும் இந்த நபர்கள் எங்கள் கண் முன் நடமாடுபவர்கள். அவர்கள் பற்றி நான் சொல்வதை விட நீங்களே ஒரு முடிவுக்கு வரமுடியும். பார்ப்பன ஆதிக்க கலாச்சாரங்களை, மரபுகளை உடைப்பதாக எழுதிக் கொண்டு அக்கலாச்சார கழிசடைகளை தங்களின் சொந்த வாழ்வில் எங்களின் கண்முன்னே "உன்னதம்" என போற்றி நடைமுறைப்படுத்தும் இவர்களை எப்படி நான் தலித்தியவாதிகளாக ஏற்றுக் கொள்ளமுடியும்? இதே தலித்தியம் பேசும் சோபாசக்தியைப் பற்றி உங்களுக்கே தெரியும். மதுவெறியில் அடிக்கடி ஆபிரிக்க கறுப்பு இன மக்களை "கறுப்பு நாய்கள்" எனத்திட்டுவதும், கறுப்பினப் பெண்களை பாலியல் நிந்தனைச் சொற்களால் இழிவு படுத்தும் சாக்கடைத் தனமான மொழியாடல்களை பேசுவதும் தொடர்பாக இவரோடு நானே பலதடவை முரண்பட்டுள்ளேன். இதுதான் இவர்களின் தலித்தியம், பெண்ணியம் பற்றிய புரிதல்.

***பின்நவீனத்துவத்தை நீங்கள் நிராகரிக்க காரணம் என்ன?***

பின் நவீனத்துவம் அமைப்பு வடிவங்களையும், புரட்சிகரப் போராட்டங்களையும் எப்போதுமே ஏற்றுக் கொண்டதில்லை. அதன் அரசியல் சந்தர்ப்பவாத ஏகாதிபத்திய சார்பு நிலை கொண்டது. கேள்விகளை எழுப்பும் தீர்வு சொல்லாது. உதாரணமாக தலித்மக்கள் மீதான ஒடுக்கு முறை பற்றி பேசும். அவர்களின் விடுதலைக்கான தீர்வு பற்றி பேசாது. புரட்சி மாற்றம், புரட்சிகர சமூக எழுச்சி, விடுதலை இவை அனைத்தையும் நிராகரித்து எதிரிக்கெதிராக ஒன்றுபடும் போக்குக்கு எதிரான செயல் கொண்டதாகவே பின் நவீனத்துவத்தின் அரசியல் இருக்கின்றது. இதனால் தான் பின் நவீனத்துவத்தை ஆய்வு செய்த ஹேபர் மாஸ் போன்றோர் பின் நவீனத்துவம் மிகவும் பிற்போக்குத்தன்மை கொண்ட ஏகாதிபத்திய சிந்தனை என்று கூறினார்கள். அத்தோடு, பின்நவீனத்துவத்தின் முக்கிய குறைபாடு சமூகத்தின் இயங்கியல் போக்கை (Dialectialal relation ship) அதன் உறவை நிராகரித்து விடுகின்றது. இந்த பின்நவீனத்துவ அரசியல், அதன் இன்றைய போக்கு பற்றி நிறையவே பேச முடியும். பிறிதொரு சந்தர்ப்பத்தில் பார்ப்போம்.

***அப்படியானால் இன்றைய இயக்கங்களின் அமைப்பு வடிவங்களை***



படிப்பகம்

www.padippakam.com



*நீங்கள் ஏற்றுக் கொள்கின்றீர்களா?*

இன்றைய இயக்கங்களின், கட்சிகளின் அமைப்பு வடிவங்கள், செயற்பாடுகள் தொடர்பாக எனக்கு கடும் விமர்சனம் உண்டு. இவை அதிகாரத்துவ மேலாதிக்க குணம் பெற்றவை. எனவே அதிகாரம், மேலாதிக்கம் மற்றும் அமைப்புக்களின் செயல்வடிவம், அரசியல் பற்றி நுண்ணிய தளங்களில் ஆய்வு செய்யவேண்டிய கடமை எங்களுக்கு உண்டு. இதன் மூலம் ஆரோக்கியமான ஜனநாயகம் மிக்க ஒரு புரட்சிகர அமைப்பு வடிவத்தை உருவாக்கமுடியும். அதை விட்டுவிட்டு பின்நவீனத்துவ அரசியல் போன்று புரட்சிகர அமைப்பு வடிவங்கள் அனைத்தையும் நிராகரிக்க முடியாது.

*மார்க்சியம் அனைத்திற்கும் தீர்வை தரும் என்று கூறுகின்றீர்களா?*

நான் அப்படிக் கூறவில்லை. வைதீக மார்க்சியர்கள் கூறுவது போல் அனைத்திற்கும் நிவாரணம் மார்க்சியமே என்று கோஷம் எழுப்பவில்லை. மார்க்சியம் சில ஒடுக்குமுறைகளை கவனத்தில் கொள்ளத் தவறுகின்றது என்ற விமர்சனத்தை நான் ஏற்றுக் கொள்கின்றேன். இன்று சமூக ஒடுக்கு முறைகள் பன்முகத்தன்மை கொண்டனவாக இருக்கின்றன. மொழி, இனம், சாதியம், மதம், கலாச்சாரம், நிறம், பால், வர்க்கம் என பல்வகைப்பட்ட ஒடுக்குமுறைகளுக்கு நாம் முகம் கொடுக்கவேண்டியுள்ளது. எனவே மார்க்சியம் கவனம் கொள்ளாத நிலைகளைக் கவனத்தில் கொண்டு அவற்றை ஆய்வுகளுக்குட்படுத்தி மார்க்சியத்தின் ஆரோக்கியமான நீட்சிக்கும், விரிவான சிந்தனைப் பரப்புக்கும் கொண்டு செல்லவேண்டியது இன்றைய மார்க்சியர்களின் கடமை என்று கருகின்றேன். இன்று பல மார்க்சியவாதிகள் இதில் கவனம் செலுத்துகின்றனர். குறிப்பாக கடந்த காலங்களில் பாலினத்துவத்திற்கும் வர்க்கத்திற்குமான உறவு முரண் பற்றி யூலியட் மைக்கல் என்ற பெண்ணிலைவாதி "The Longst Revolution" ( நீண்ட நெடும்புரட்சி ) என்ற நூலில் ஆராய்வதை நாம் காணமுடியும். அதேபோல் அந்தோனியோ கிராம்சி பாசிசம், அதிகாரம், அமைப்பு வடிவம், கட்சி, கோட்பாடு இவற்றிற்கான உறவு நிலை பற்றி ஆராய்ந்திருக்கின்றார். நமது வைதீக மார்க்சியர்கள் ஒரு வரையறை வைத்துள்ளார்கள். மார்க்ஸ், லெனின், ஸ்டாலின், மாவோவைத் தாண்டி அவர்களின் தேடல் உலகம் விரிவடையவேண்டும்.



படிப்பகம்

*சமீபத்தில் தமிழகத்திற்கு இலக்கிய விஜயம் ஒன்றை மேற்கொண்டதாக குறிப்பிட்டு தமிழக "கதவு" எனும் சிறுசஞ்சிகை ஒன்றில் புலம் பெயர் இலக்கியம் பற்றி நீங்கள் குறிப்பிடும் ஸ்ராலின் அவர்கள் ஒரு கட்டுரை எழுதியுள்ளாரே படித்தீர்களா?*

ஆமாம், படித்தேன். மிக மோசமான நடத்தைகள், சிந்தனைகள், பொய்களையே தனது வாய்மொழியாகக் கொண்ட நபர்களின் கட்டுரைகளில் எப்படி உண்மைத் தன்மையைக் காணமுடியும்? அத்தோடு வரலாற்றுத் திரிபுகளும், குழிபறிப்புக்களும், சதிகளும் காலங்களின் நீட்சியினால் மறைக்கப்பட்டு இலக்கிய தகுதிகளாக்கப்படும் விசித்திரமான மாயச் சூழலை இன்றைய இலக்கிய சூழலில் காணக் கூடியதாகவுள்ளது. தகுதிகளாக் கப்படும் இப் பொய்மை புனைவுகளுக்குப் பின்னால் கொட்டிக் கிடக்கும் அரசியல் வரலாற்றுத் திரிபுகளை வெளிக் கொணரமுயல்வது இன்றைய நேரிய வரலாற்றின் முக்கிய கடமையாகிறது. இந்த வெளிப்படுத்தல் அற்று நாங்கள் மௌனம் கொள்வது பாசாங்கு மனிதர்களின், சந்தர்ப்பவாதிகளின் மனக்கிடங்கை அங்கீகரிப்பதாக அர்த்தம் பெற்றுவிடும் அபாயத்தையும் நாம் புரிந்து கொள் ளவேண்டும். அத்தோடு தங்களின் சுயநல மேம்பாட்டிற்காக இச்சிறுசஞ் சிகைகளை இவர்கள் பயன்படுத்துவதன் மூலம் இச்சிறுசஞ்சி கைகள் பற்றிய நம்பகத்தன்மை மீதான சந்தேகம் எமக்கு எழ வாய்ப்பு உண்டு. இதை சிறு சஞ்சிகையாளர்கள் உணரவேண்டும். உதாரணமாக இந்நபர் பற்றி எழுதும் போது

1. பட்டப்படிப்பை பாதியில் நிறுத்தி கொண்டதாகவும்
2. இலங்கையில் வாழமுடியாமல் துரத்தப்பட்டு பலதேசம் கடந்து பிரான்ஸ் நாட்டில் அரசியல் தஞ்சம் கோரியதாகவும்
3. 23வது இலக்கிய சந்திப்பின் போது வெளியிடப்பட்ட "இனியும் சூல்கொள்" தொகுப்பின் தொகுப்பாசிரியர் என்றும்
4. இலங்கையில் வெளிவந்த "உண்மை" பத்திரிகையின் துணையாசிரியராக பணியாற்றியதாகவும் குறிப்பிடுகின்றார். இவ்வளவு கூற்றுக்களும் எவ்வளவு

அயோக்கியமான பொய்கள் என்பதைப் பார்ப்போம். இந்நபரை நீண்டகாலமாக இலங்கையில் வைத்தே தெரியும். தமிழ்தேசிய விடுதலையின் பெயரால் பட்டப்படிப்பை பாதியில் விட்டதாக "கரடி" விடும் போக்கினூடாக எதை வாசகர்களுக்கு சொல்ல முயல்கின்றார்! பட்டப்படிப்பிற்கான பல்கலைக்கழக புகுமுக பரீட்சையில் சித்தி பெறமுடியாத இவர் எவ்வாறு பட்டப்படிப்பை இடைநடுவில் நிறுத்தமுடியும்? தமிழ் மத்தியதர வர்க்கத்திற்கே உரிய

www.padippakam.com



குட்டி முதலாளித்துவ சிந்தனையின் வெளிப்பாடு இது. பட்டப்படிப்பு என்பதை சமூக அங்கீகாரமாகக் கருதும் இச் சமூகத்தின் போலி மன உணர்வுகள் எவ்வாறு இவரிடம் கட்டியமைக்கப்படுகின்றது என்பதை பாருங்கள்.

இரண்டாவது பொய் இலங்கையில் வாழமுடியாது துரத்தப்பட்டது. பொருளாதார அகதிகளாக ஐரோப்பாவுக்கு வந்து "அரசியல் அகதி அங்கீகாரம் பெற்றுக் கொண்ட" பலர் கூறும் வார்த்தைகள் இவை. இவ்வாறே துரத்தப்பட்டதாக கூறும் இவர், 1994 ஆம் ஆண்டில் தான் துரத்தப்பட்ட நாட்டிற்கே சென்று தமிழீழ விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டிற்குள் இருந்த புலிகளின் மிலேச்சத்தனமும், மனித உரிமைமீறல்களும், அராஜக நடவடிக்கைகளும் மிகுந்த தன் கிராமத்திற்கே சென்று திருமணம் செய்து மூன்று மாதம் தங்கி பிரான்ஸ் திரும்பிய வரலாற்றிலிருந்து இவரின் "துரத்தப்பட்ட" என்பதன் அர்த்தத்தை நீங்கள் புரிந்து கொள்ள முடியும். சமீபத்தில் இவரின் துணைவி பிரான்சிலிருந்து ஈழத்திலுள்ள புலிகளின் கட்டுப்பாட்டிற்குள் இருக்கும் தன் கிராமத்திற்கு சென்று விடுமுறையைக் கழித்துவிட்டு வந்ததையும் இவ்விடத்தில் நாம் நினைவு கூறுவது சாலப் பொருந்தும்.

மூன்றாவது பொய், "இனியும் சூல் கொள் "தொகுப்பின் தொகுப்பாசிரியர் என்பது. இத் தொகுப்பு பாரிசில் நடந்த 23வது இலக்கிய சந்திப்பின் போது வெளியிடப்பட்ட தொகுப்பு நூல். இந்த தொகுப்புக்கு குறிப்பிட்ட எவருமே தொகுப்பாசிரியராக இருக்கவில்லை. நீங்கள் தொகுப்பை பார்த்தால் புரிந்து கொள்ளமுடியும். இது பல்வேறு நண்பர்களின் கூட்டுமுயற்சியில் உருவாக்கப்பட்டது. இவ் இலக்கியச் சந்திப்பை நடாத்துவதற்கு ஒன்பது பேர் கொண்ட ORGANISING COMMITTEE ஒன்றை நிறுவினோம். இதில் இந்த நபரும் ஒருவர் அவ்வளவே.

நான்வது பொய், இலங்கையில் வெளிவந்த உண்மை பத்திரிகையின் துணை ஆசிரியர் என்பது. இச் செய்திக்குப் பின்னால் இருக்கும் வேறு செய்திகளையும் நான் கொஞ்சம் சொல்லவேண்டியுள்ளது. உண்மை என்பது ஒரு பத்திரிகையாக தகுதியாக்கப்பட்டு எழுதப்படுவது, தமிழக அப்பாவி வாசகன், வாசகியை ஏமாற்றுவதற்கு துணை நிற்கும் என்பதில் நான் கருத்து முரண்பாடு கொள்ளவில்லை! ஆனால் உண்மை எனும் இப்பிரசுர உள் உலகை அறிந்த, தெரிந்த என் போன்றவர்களையும் இந் நபர் ஏமாற்ற முயல்வது தான் வியப்பாகவுள்ளது! காலங்களின் எண்ணிக்கை அதிகரிப்பு துரோகங்களையும், சதிகளையும் மறைத்துவிடும் வல்லமை பெற்றது என இவர் போன்றவர்கள் நினைப்பது அழகல்ல என்றே சொல்லவேண்டும்.



படிப்பகம்

www.padippakam.com



ஐக்கிய தேசிய கட்சி ஆட்சிக் காலத்தின் போது லலித்அத்துலத் முதலி பாதுகாப்பு அமைச்சராக இருந்த காலத்தில் பாதுகாப்பு அமைச்சின் நிதிஉதவியோடு மாதமாதம் கொழும்பிலிருந்து வெளியிடப்பட்ட பிரசுரத்தின் பெயரே "உண்மை" என்பது. தமிழ்பேசும் மக்களின் போராட்டத்தை தொடர்பூடக சாதனங்களின் மூலம் ( **MEDIA AS A WEAPON OF POWER** ) நசுக்க முயன்ற பாதுகாப்பு அமைச்சின் குள்ளநரித்தனத்தின் வெளிப்பாடே உண்மை பிரசுரத்தின் அரசியலாகும். இப்பிரசுர வெளியீட்டுக்கு கொழும்பு துறைமுக கூட்டுத்தாபனத்தில் பணிபுரிந்த ஓர் தமிழ் பேசும் தொழிற்சங்கவாதி பொறுப்பாக இருந்தார். இப்பிரசுரத்தின் விநியோகப் பொறுப்பை பாதுகாப்பு அமைச்சே பொறுப்பெடுத்து தமிழ்பிரதேசங்களுக்கு தபால் மூலம் இலவசமாக விநியோகித்து வந்தது. இது தான் "உண்மை" பிரசுரத்தின் உண்மை வரலாறு ஆகும். எனவே பிற்போக்கு மயமான கடந்த காலங்களை எவ்வித சுயவிமர்சனமும் அற்று முற்போக்கு முலாம் பூசி இன்று வெளிக்காட்ட முயலும் போக்கு வரலாற்றின் நேரிய தன்மையை நசுக்கி விடும் என்பதை நாம் உணர வேண்டும். இந்த புனைவுகள், பொய்மைகள் கலந்த புகலிட இலக்கிய ஜம்பவான்களின் கூட்டுக் கலவையிலிருந்து புகலிட இலக்கியத்தைக் காப்பாற்றிக் கொள்ளவேண்டிய அவசரத்தேவை இன்று உள்ளது. அத்தோடு இந்த வியாபாரிகளின் தமிழக இலக்கிய விஜயங்களின் மர்மங்களையும் நாம் புரிந்து கொள்ள முயலவேண்டும்.

**கேள்விகள்**
**தொடர்கின்றன...**

முடிய  தொடர்ந்து ....



படிப்பகம்

www.padippakam.com



"எவ்வாறு சித்திரவதைக்கு உள்ளானவர்களும்,
சித்திரவதையாளர்களும் ஒரே இடத்தில்
சமாதானமாகி வாழமுடியும்?
ஒடுக்கு முறையால் பீதியூட்டப்பட்ட ஒரு நாட்டில்
வெளிப்படையாக பேசுவது பற்றிய பயம் இன்றளவும்
எங்கெங்கும் நிறைந்திருக்கும் ஒரு நாட்டில் எவ்வாறு
அந்த நாட்டை வேதனைகளிலிருந்து மீட்க முடியும்?
பொய்யே வழமையாகிவிட்ட போது உண்மையை
எப்படித்தான் எட்டுவது?
வரலாற்றின் கைதிகளாக நாம் ஆகாமல் எப்படி
கடந்த காலத்தை உயிர்ப்புடன்
வைத்துக்கொள்வது?
வரும் காலத்திலும் இவை நேரலாம் என்று கருதாமல்
எவ்வாறு அதை முற்றிலும் மறத்தல் முடியும்? .....
.....கடந்த காலத்தை நாம் மறுத்து விடும்போதும்,
நிராகரிக்கும் போதும், உண்மை நம்மிடம் வந்து
முணுமுணுக்கும் போதும், கதறும் வேளையிலும்
அதன் விளைவுகள் என்னவாக இருக்கும்?"

ஆரியல் டோப்மேன்

நாடகாசிரியர்/கவிஞர்/விமர்சகர்/மொழிபெயர்ப்பாளர் - சிலி



படிப்பகம்

www.padippakam.com

..... பாஸிசத்தின்/ அராஜகத்தின் இன்னோர் முகமும் புகலிடத்தில் உண்டு. இது ஆயுத வல்லமையால் உருவாக் கப்படுவதல்ல, எழுத்துக்களால் உருவாக்கப்படுவது. கடந்த காலங்களில் துப்பாக்கி மனிதர்களை மாத்திரமே நாம் முகம் கொள்ள வேண்டியவர்களாக, பயம் கொள்ள வேண்டியவர்களாக இருந்தோம். இன்று இந்த சந்தர்ப்பவாத எழுத்து வியாபாரிகளின் பேனா முனைக்கும் நாம் பயம் கொள்ள வேண்டியவர்களாக இருக்கின்றோம். இந்த எழுத்து வியாபாரிகள் ஒடுக்கப்பட்ட மக்களின் விடுதலையை நேசிக்கும் கோட்பாடுகளை கொச்சைப் படுத்துகின்றவர்களாக, ஏகாதிபத் தியத்தின் கழிசடைத் தனமான நுகர்வுக் கலாச்சார சீரழிவுகளை 'உன்னதம்' என போற்றுபவர்களாக இருக்கின்றார்கள். இந்த புலம் பெயர் சூழலில் மலிந்து காணப்படும் ஆயுத வன்முறை, மனித உரிமை மீறப்படுதல் தொடர்பாய் இந்த இலக்கிய வியாபாரிகள் எவ்வித எதிர்ப்புக் குரலும் இன்றி மௌனமாகவே தம் வாழ்நாளைக் கழிக்கின்றார்கள். பெண்ணியம் குறித்த புரிதலற்று / பாலியல் வக்கிரங்களின், வெறித்தன பாலியல் மனோவியாதிகளின் / ஆணாதிக்க சிந்தனைகளின் மொத்த குத்தகைக்காரர்களாய் இவர்கள் இயங்குகின்றார்கள். இவ்வாறான பாலியல் வக்கிர ஆணாதிக்க மனோ வியாதிப் போக்குகளைக் கண்டிக்கும், அதிகார வன்முறைகளை எதிர்க்கும், ஒடுக்கப்படும் மக்களின் பால் அக்கறை கொண்ட அனைவரையும் இந்த எழுத்து வியாபாரிகள் தங்களின் எழுத்துக்களால் கொச்சைப் படுத்தியும் அவர்கள் மீது சேற்றைவாரி இறைப்பதுமாய் தங்களின் எழுத்து வன்முறையை தொடர்கின்றார்கள். . .

(09.05.1999 பாரிசில் நடைபெற்ற சபாலிங்கம் நினைவுக் கூட்டத்தில் இடம் பெற்ற அசோக்கின் உரையில் இருந்து)

www.padippakam.com

"

என்றாவது ஒரு நாள்
ஒரு துப்பாக்கி
என்னை
அமைதியாக்கி
விடும். ஆனால் அது
வேற்று மனிதன்
ஒருவனால்
ஏந்தப்படுவதாக
இருக்காது. மாறாக
எனது வரலாற்றை
பகிர்ந்து கொள்ளும்
இச்சமூகத்தில்
வாழும் ஒரு
பெண்ணின்
கருவறையில்
இருந்து
பிரசவிக்கப்பட்ட
ஒரு புத்திரனால்
ஏந்தப்படும்
துப்பாக்கியாகவே
அது இருக்கும்.

"

1989.09.15-ம் திகதி
ராஜனி திராணகம
தன் நண்பர் ஒருவருக்கு
இறுதியாக எழுதிய
கடிதத்தில் இருந்து.....